ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை

SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD

MINISTRY OF INVESTMENT PROMOTION

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் (SLEDB) தேசிய கரிம கட்டுப்பாட்டுப் பிரிவுக்கான (NOCU) இணையதளம் ஒன்றை வடிவமைத்தல் மற்றும் மேம்படுத்தல் மற்றும் 5 ஆண்டுகளுக்காக அதனை பராமரித்தல்

**Contract: EDB/2023/NOCU/001**

1. கீழ் விபரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் ஆர்வ வெளிப்பாட்டுக்காக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

2. பணியின் நோக்கம்
   - NOCUக்கான இணையதளம் ஒன்றை வடிவமைத்தல் மற்றும் மேம்படுத்தல்
   - 5 ஆண்டுகளுக்காக அதனை பராமரித்தல்

3. தொழில்நுட்ப முன்மொழிவு மற்றும் நிதி முன்மொழிவின் இரு கடித உறை முறையில் தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைகேட்பு நடத்தப்படும்.

4. தகுதியுடைய விலைமனுதாரர்கள் மேலுள்ள பெறுகைக்காக சட்ட உரிமையை பெற்றிருக்க வேண்டும். விலைமனுதாரர்கள் 2007 இன் 07 ஆம் இலக்க சட்டம் அல்லது 1982இன் 17 ஆம் இலக்க பணிப்பாளர்கள் சட்டத்தின் குறிப்புகளின் பிரதி ஒன்று மற்றும் 1990இன் 4 ஆம் இலக்க கூட்டிணைக்கப்பட்ட வர்த்தகப் பெயர் சட்ட வர்த்தகப் பெயர் கட்டளையின் கீழ் (உறுப்புரை 149) வெளியிடப்பட்ட நிறுவனம் ஒன்றின் பதிவுச் சான்றிதழின் பிரதி ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

5. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகைமைக்கு வெற்றிகரமான விலைமனுதாரர்கள் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்தல் வேண்டும்.
   - எந்த ஒரு அரச நிறுவனத்தினாலும் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.

6. “Announcement” இன் கீழ் www.srilankabusiness.com என்ற EDB இணையதளத்தில் இருந்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை தரவிறக்கம் செய்ய முடியும்.

7. விலைமனு ஆவணங்களை இணையதளத்தில் இருந்து தரவிறக்கம் செய்யும் தரப்பினர், இலங்கை வங்கியின் லேக் வியுவ் கிளையில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் 306605 என்ற கணக்கு இலக்கத்திற்கு 2,500.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை வைப்புச் செய்ய வேண்டும் என்பதோடு வைப்புச் செய்த பற்றுச்சீட்டின் பிரதியை விலைமனு ஆவணத்திற்கு இணைத்தல் வேண்டும். (வைப்பு பற்றுச்சீட்டின் பிரதி ஒன்று இல்லாத விலைமனு ஆவணம் செல்லுபடியான ஆவணமாக ஏற்கப்படமாட்டாது)

8. இரு கடித உறைகளில் இடப்பட்ட தொழில்நுட்ப முன்மொழிவு மற்றும் நிதி முன்மொழிவு 2023.06.05 ஆம் திகதி பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தொழில்நுட்ப முன்மொழிவு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற பின் திறக்கப்படும்.

9. விலைமனுக்கள் 66 நாட்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

10. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2023.05.24 ஆம் திகதி மு.ப. 10.00க்கு விலைமனு ஆவணத்தில் வழங்கப்பட்டிருக்கும் தகவல் அடிப்படையில் சூம் வழியாக ஒன்லைனில் இடம்பெறும்.

11. EDB இன் திணைக்கள பெறுகைக் குழுவினால் (DPC) எடுக்கப்படும் முடிவு இறுதியானது என்பதோடு அவ்வப்போது வெளியிடப்படும் நிதிய ஒழுங்குமுறைகள் மற்றும் திறைசேரி சுற்றுநிருபங்களின்படி ஏதேனும் திருத்தம் மேற்கொள்வதற்கு வாங்குபவருக்கு உரிமை உள்ளது.

12. மேலும் தெளிவை பெறுவதற்கு 0771186031 அல்லது 0112300705 (நீடிப்பு 235) என்ற தொலைபேசி இலக்கங்களில் EDB - தேசிய கரிம கட்டுப்பாட்டுப் பிரிவு/ உதவிப் பணிப்பாளர் எஸ்.எம்.டி. மதுமாலியை தொடர்புகொள்ளவும்.


**தலைவர்**

**திணைக்கள பெறுகைக் குழு (DPC)**

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை**

**NDB-EDB கோபுரம், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02**

**தொ.: 011-2300705 -11 தொலைநகல்: 011-2300728**

**இணையதளம்: www.srilankabusiness.com**